சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 27.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | வீரபரஞ்ஜோதி |
| தந்தை பெயர் | : | வைரக்கண்ணு |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| வயது | : | 64 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 10.07.2011 ஆம் தேதி பேரளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நிலைய பொறுப்பில் இருந்தபோது இரவு 10.00 மணியளவில்

கடுவங்குடி மானாந்தெருவை சேர்ந்த தங்கவேல் மகன் பக்கிரிசாமி என்பவர் நிலையம் ஆஜராகி என்னிடம் அவரது தம்பி சாமிநாதன் என்பவரை அடையாளம் தெரிந்த நபர்கள் கடுவங்குடி 1ம் எதிரி செல்வம் வீட்டின் முன்பாக கொலை செய்துவிட்டதாக கூறி புகார் வாக்குமூலம் அளித்தார். அந்த புகார் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் தான் ஆகும். அது **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அ.சா.ஆ-9 ன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 275/2011 சட்டப்பிரிவுகள் 147, 148, 302 of IPC r/w 3(1)(r) SC/ST (PoA) Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு பதிவு செய்த பின்னர் அ.சா.ஆ-9 மற்றும் அ.சா.ஆ-10 ஆகியவைகளை நன்னிலம் குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.ஆ-9 ஆன புகார் வாக்குமூலம் அளித்த பக்கிரிசாமி என்பவர் அவருக்கு தகவல் அளித்த அப்பு என்பவர் யாரோ கழுத்தை அறுத்து சாமிநாதன் கொலையுண்டு கிடந்தார் என்று தான் தகவல் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த எதிரிகளுக்கும், புகாரில் சொல்லப்பட்டுள்ள சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும், தவறான தகவலின் அடிப்படையில் இந்த எதிரிகளை முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்துள்ளீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.27 18:01:47 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.